கொண்டு, ஒரு நாள் அதற்காக ஒதுக்குவதற்குத்தான் இன்றைக்கு 11 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தைப் பேரவைத் தலைவர் அவர்கள் கூட்டியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(1) ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று (10–2–1983) அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-10)

(ஆ) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மற்றொரு மசோதாவின்மீது மேலவையில் பதிலளிப்பதற்காக, அந்த அவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பதால் அவர்கள் பெயரில் முதலில் இருக்கிற சட்ட முன்வடிவை இன்றே இறுதியில் எடுத்துக் கொள்ளலாம் என்ற வகையில் நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30(3) இன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் ', அரசினர் சட்ட முன்வடிவுகள்'' என்ற தலைப்பில் இனம் (1) இல் இருக்கிற ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1983)' என்ற சட்ட முன்வடிவை, இனம்(6) ' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1983)' என்ற சட்ட முன்வடிவுக்குப் பின்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.